முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 588**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.05.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சக்தியாய் வாழும் தேசிகா
ஞானிகள் துணைபட இயங்கும் குருஅரங்கா
வானவர்கள் நித்தம் உயர் சக்தி தந்துவர
வாழும் ஞானியே வள்ளலே எந்தன் சூட்சுமமே
2. சூட்சுமம் மிகுந்த அரங்கன் உந்தனுக்கு
சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
மாட்சிமைபட பிலவ தகர் திங்களில்
மார்க்கமுடன் அரங்கனுக்கு தொடர்ந்து உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் சக்திகூடும்
உயர் சீடர் பெருமக்கள் அரங்கனுக்கு உருவாகி
குறைவின்றி தர்மம் உலகமெங்கும்
குடிகாக்கும் வண்ணம் பெருகிநிற்கும்
4. நிற்கவே அரங்கன் ஆசிகொண்டு
நிலவுலகம் ஞானவான்கள் தலைமை கூடி
அற்புதமான ஞானயுகமாற்றம்
அரங்கன் தயவாலே நடந்தேறும்
5. நடந்தேற சுப்ரமணியப்பெருமான் யானும்
ஞானமாக அரங்கனுள் சக்தியாக
சுடரேற்றி தெய்வபலம் கூட்டி
சுத்த நெறி என்கின்ற திறவுகோள் காட்டி
6. காட்டியே உலகை நாட்டுவிக்க
கருணைபட அரங்கன் தயவுகொண்ட
உலகமக்களே வாட்டம் நீங்கி
வையகத்தில் பாதுகாப்பும் உயர்வும் சிறப்பும்
7. சிறப்பான வாழ்வாதாரமும் அதிபலமும்
சிந்தை தெளிவும் பூரண ஞானபலமும்
மறுப்பின்றி மரணமில்லா பெருவாழ்வும்
மண்ணுலகில் கண்டு ஞானிகளாவர்
8. ஆவதற்கு அரங்கன் வழி அற்புதம்
ஆறுமுகன் நித்தம் நித்தம் அருளிவர
வரங்கள் பெற ஓங்காரக்குடில் நோக்கி
வையகத்தார் வரவர இந்த அற்புதம் உலகமாற்றமாக காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே –சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.